ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk


# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2019 செத்தெம்பர் 16 |

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2019 ஓகத்து

**கொ.மு.சு**
சுட்டெண்
பெறுமதி **56.6**
2019 யூலையுடன் ஒப்பிடுகையில் 0.9 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு

2019 ஓகத்தில் தயாரிப்பு நடவடிக்கைகள் மேலும் உயர்ந்த வீதத்தில் விரிவடைந்து 56.6 கொண்ட பெறுமதிச் சுட்டெண் ஒன்றினைப் பதிவுசெய்தன. இது, 2019 யூலையுடன் ஒப்பிடுகையில் 0.9 சுட்டெண் புள்ளிகளைக் கொண்டதொரு அதிகரிப்பாகும். தயாரிப்பு கொள்வனவு முகாமைத்துவச் சுட்டெண்ணில் ஏற்பட்ட இவ்விரிவிற்கு புதிய கட்டளைகளில் விசேடமாக எதிர்வருகின்ற பண்டிகைக் கால கேள்வியினை நிறைவுசெய்வதற்காக உணவு மற்றும் குடிபானங்கள் அத்துடன் ஆடைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறையின் தயாரிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். அதேவேளை, ஓகத்து மாதகாலப்பகுதியின் போது தொழில்நிலையானது விசேடமாக உணவு மற்றும் குடிபானத் துறையில் மெதுவான வீதத்தில் மேலும் அதிகரித்தது. அதேவேளை, புடவை மற்றும் ஆடை தொழில்துறையிலுள்ள பல பதிலிறுப்பாளர்கள் சந்தையில் தொழிலாளர் கிடைக்கப்பெறும் தன்மை குறைவாகவிருந்தது என சுட்டிக்காட்டினர்.



மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | யூலை | ஓகத்து | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **55.7** | **56.2** | **+** | **அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில்** |
| | | கொ.மு.சு துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 59.0 | 61.0 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| உற்பத்தி | 57.5 | 60.5 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| தொழில்நிலை | 52.0 | 50.5 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 57.0 | 55.0 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலாளர்களின் விநியோகிக்கும் நேரம் | 50.0 | 50.5 | + | நீட்சி, உயர்ந்த வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அதேவேளை, ஓகத்தில் கொள்வனவுகளின் இருப்பு குறைவான வேகத்தில் விரிவடைந்தது. புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பன உயர்வான வீதத்தில் விரிவடைந்த போதிலும், முன்னைய மாதத்திலிருந்து முன்கொண்டு செல்லப்பட்ட திரண்ட கையிருப்புகளின் காரணமாக கொள்வனவுகளின் கையிருப்பு குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருக்கவில்லை. மேலும், நிரம்பலர்கள் விநியோக நேரம், விசேடமாக உள்நாட்டு நிரம்பலர்களிடமிருந்து சிறிதளவு உயர்வான வீதத்தில் நீட்சியடைந்தது.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பின் அனைத்து துணைச் சுட்டெண்களும், மீளாய்விற்குரிய காலப்பகுதியின் போது தயாரித்தல் நடவடிக்கைகளில் ஒட்டுமொத்த விரிவாக்கமொன்றினைச் சமிக்ஞைப்படுத்தி 50.0 கொண்ட தொடக்க அளவினை (நடுநிலை) விஞ்சியிருந்தன.


**பணிகள் துறை 2019 ஒகத்தில் தொடர்ந்தும் விரிவடைந்தமைக்கு புதிய வியாபாரங்கள்,** வியாபார நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புக்கள் 2019 யூலையுடன் ஒப்பிடுகையில் மெதுவான வேகத்திலேனும் விரிவடைந்தமை பக்கபலமாக அமைந்தன.

**கொ.மு.சு**
**சுட்டெண்**
**பெறுமதி 52.9**

2019 யூலையுடன் ஒப்பிடுகையில் 4.2 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி

2019 ஒகத்தில் வியாபார நடவடிக்கை விரிவடைந்தமைக்கு சுற்றுலா வருகையில் ஏற்பட்ட மேம்பாட்டின் காரணமாக தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபானத்துறை என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. 2019 ஒகத்தில் புதிய வியாபாரங்கள், குறிப்பாக, நிதியியல் பணிகள் மற்றும் போக்குவரத்துத் துணைத் துறைகள் விரிவடைந்தன.

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

தொழில் நிலைத் துறையில் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் ஒகத்தில் அலுவலர் மட்டத்தில் வீழ்ச்சியொன்று காணப்பட்டமைக்கு அலுவலர்கள் ஓய்வுபெற்றமையும், காலம் கடந்து வெற்றிடங்கள் காணப்பட்டமையும் காரணங்களாக அமைந்தன. அதேவேளை, நிலுவையிலுள்ள பணிகள் துணைச் சுட்டெண் தொடக்க மட்டமான 50.0 இற்கும் கீழே தொடர்ந்தும் காணப்பட்டு, கேள்வியில் ஏற்படும் எந்தவொரு அதிகரிப்பும் பணிகள் வழங்குவோரின் ஏற்கனவேயுள்ள இயலாற்றலின் மூலம் ஈடுசெய்யப்படும் என்பதனை எடுத்துக்காட்டியது.

நடவடிக்கைக்கான எதிர்பார்ப்புக்களின் நியதிகளில், மூன்று மாத வியாபார தோற்றப்பாடு மீதான பணி வழங்குவோரின் எதிர்பார்ப்பு 2019 யூலையுடன் ஒப்பிடுகையில் ஒகத்தில் தளர்வடைந்து காணப்பட்டது.

| மாறி | யூன் | யூலை | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **57.1** | **52.9** | **+** | **அதிகரிப்பு, மெதுவான வீதத்தில்** |
| <u>**கொ.மு.சு துணைச் சுட்டெண்கள்**</u> | | | | |
| புதிய வியாபாரங்கள் | 59.9 | 52.7 | + | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கைகள் | 63.5 | 59.6 | + | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 43.2 | 43.6 | - | வீழ்ச்சி, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணிகள் | 47.7 | 45.3 | + | வீழ்ச்சி, உயர்ந்த வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 71.4 | 63.4 | + | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு>50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு<50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உ.ற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.